# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 1825/10 - 2013 අගෝස්තු 27 වැනි අඟහරුවාදා - 2013.08.27

*1825/10 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணிச் சீர்திருத்தச் சட்டம்**

*19 ஆம் பிரிவின் கீழான நியதிச்சட்ட முறை விதிப்பு*

விசேட இல. : கொ/3439.

கொழும்பு 07, கேம்பிரிஜ் பிளேஸ், இல. 9/7 இல் வசிக்கின்ற திருமதி கர்டி ஐரின் கமகேயினால் நியதிச் சட்டத்தின் 18ஆம் பிரிவின் கீழ் முறையானதொரு பிரகடனம் செய்யப்பட்டுள்ளதுடன், சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு அளிக்கப் பட்டுள்ள அதிகாரங்களின்படி இந்த ஆணைக்குழுவினால் நியதிச்சட்ட முறையான குத்தகைக்காரிக்கு சொந்தமாகவிருந்த கமத்தொழில் காணிகளில் அவர் வைத்திருக்க அனுமதி வழங்கவேண்டிய பகுதியை நிர்ணயித்து அவரின் மரணசாதனச் சொத்துக்கு சட்டமுறையானதொரு விதிப்பு விதிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு நியதிச்சட்ட முறையான குத்தகைகாரிக்கு வைத்திருக்க அனுமதி வழங்கப்பட்ட கமத்தொழில் காணிப் பகுதிகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

சட்டத்தரணி நிமல் ஜீ. புஞ்சிஹேவா,
தலைவர், காணிச் சீர்திருத்த ஆணைக்குழு.

இல. சீ, 82,
ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை, கொழும்பு 07,
2013ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதி.

**அட்டவணை**

01. தென் மாகாணம் காலி மாவட்டத்தின் நாகொடை பிரதேச செயலகப் பிரிவின் உடுகம (இறுதிக் கிராம வரைபட இல. 528) எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட ஜீஏ/என்ஜீடீ/2010/16 ஆம் இலக்க மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதுமான ‘ஹோமதொல மூகலான’ எனும் காணியில் காணித்துண்டு ‘சீ’ ஆகிய காணிப் பகுதியில் இருந்து பிரிவிடாத 50 ஏக்கர் 0 ரூட் 00 பேர்ச்சஸ் அளவு கொண்ட காணிப் பகுதியும் அதனுள்ளடங்கிய சகலதும்.

09-213


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.